# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 181/மா/2017

ஆணை எண். 99/2018

நாள் : 16/04/2018

**திரு T. மாரியப்பன்,**
**திண்டுக்கல்.** – முறையீட்டு மனுதாரர்

இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை
இயக்குநரகம்,
சென்னை – 600 035. – எதிர் மனுதாரர்

திண்டுக்கல், நெட்டுத் தெரு, முனிசிபல் காலனி முகவரியில் வசிக்கும் திரு T. மாரியப்பன் அவர்களின் 13.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 15.09.2017 அன்று பெறப்பட்டு, 181/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல், நெட்டுத் தெரு, முனிசிபல் காலனி முகவரியில் வசிக்கும் திரு T. மாரியப்பன் என்பவர், தனக்கு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் உயர்த்தப்படவேண்டியுள்ளதால் திண்டுக்கல் மாநகராட்சியில் உள்ள தனது பணிப்பதிவேட்டினைப் பெற்று திருத்திய ஓய்வூதியம் வழங்கிட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி 30.06.2013 அன்று பணி ஓய்வு பெற்றதால், மனுதாரரின் கோரிக்கை சம்பந்தமாக மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்ற பின், ஓய்வூதியம் வழங்கப்படுவதற்கான உரிய முன்மொழிவுகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும், அம்முன்மொழிவினை பரிசீலனை செய்த அவ்வியக்குநரகம், மனுதாரருக்கு தேர்வு நிலை, சிறப்புநிலை வழங்கி ஊதியம் நிர்ணயம் செய்ததில் 01.04.2005 அன்று வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு 01.05.2004 முதல் தவறுதலாக வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது என்றும், தவறுதலாக வழங்கப்பட்ட ஊதியம்

திருத்தம் செய்யப்படும் வரை 01.01.2016 அன்று ஊதியத்தின் அடிப்படையில் 01.07.2013 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 4,022/– என்ற அளவில் ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்பட்டன எனக் குறிப்பிட்டுள்ளார். எனினும், மனுதாரருக்கு தவறுதலாக வழங்கப்பட்ட ஊதியம் திருத்தம் செய்யப்பட்டு 19.11.2014 நாளிட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரக ஓய்வூதிய ஒப்பளிப்புக் கடிதத்தில் அடிப்படை ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.5,041/– வீதம் வழங்கவும் இதர ஓய்வூதியப் பலன்களில் வித்தியாசத் தொகைக் கணக்கிடப்பட்டு நிலுவைப் பணப்பயன்கள் அனைத்தும் 02.01.2015 அன்று மனுதாரரின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளையில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். முறையீட்டு மனுதாரர் அறியாமையாலும், முறையாக மாநகராட்சியை தொடர்பு கொண்டு உரிய விளக்கம் பெறாமல் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடம் தனது கோரிக்கை சம்பந்தமாக விளக்கம் பெறும் பொருட்டு26.02.2018 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு அழைக்கப்பட்டார். முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கும் வருகை தரவில்லை. எனவே, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் விரிவான அறிக்கையினை ஏற்று இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 16–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 19/4

19.4.18

19/4/18

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

2. திரு T. மாரியப்பன்,
முனிசிபல் காலனி,
நெட்டுத் தெரு,
திண்டுக்கல்.

3. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநரகம்,
சென்னை – 600 035.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்